

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், முக்கொம்பு மேலணை காவிரி ஆற்றில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூபாய் 4.50 இலட்சம் மதிப்பீட்டில் நன்னீர் மீன்குஞ்சு பெருவிரலிகள் ஆறுகளில் இருப்பு செய்தல் திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி , மண்ணச்சநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சீ.கதிரவன், ஒன்றியக் குழுத் தலைவர் துரைராஜ், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (திருச்சி மண்டலம்) இரா.ரவிச்சந்திரன், உதவி இயக்குநர், மு.குமரேசன், ஆய்வளர்கள் சி.பாஸ்கர், ரா.கௌதம், கன.வீரமணிமாருதி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக

# முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தேர்வு!

## ஆட்சிக்குழு ஒருமனதாகத் தெரிந்தெடுத்தது!

சென்னை, நவ.3-

**தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை, ஆட்சிக்குழு ஒருமனதாகத் தேர்வு செய்துள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குத் தலைவர்களாக இதுவரை தி.சு. அவினாசிலிங்கம், (15/08/1947 07/12/1982), சி.சுப்பிரமணியம் (08/12/1982 09/03/1990), முனைவர் வா.செ.குழந்தைசாமி (10/3/1990 10/12/2016) அவருக்குப் பின் முனைவர் பொன்னவைக்கோ ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

இப்போது 24/10/24 கூடிய ஆட்சிக்குழுவும் பொதுக்குழுவும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்திய மொழிகளிலேயே தமிழுக்குத்தான் முதல் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. உருவாக்கிய அமைப்பு தமிழ் வளர்ச்சிக் கழகம். உருவாக்கியவர் அப்போது



சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக (1946 1949) இருந்த திசு. அவினாசிலிங்கம் . இவர்தான் தமிழ்வழிக் கல்வியை அறிமுகம் செய்தவர்.

இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பே 1946 இல் தமிழ் வளர்ச்சிக்கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது.

விடுதலை அடைந்த ஆகஸ்ட் 15, 1947 ஆம் நாள் கலைக்களஞ்சியத் திட்டத்தை அறிவித்திருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.

சிலப்பதிகாரத்திற்கு உரை தந்த தமிழிசை இயக்கத்தை உருவாக்கிய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசின் முதல் நிதி அமைச்சரான ஆர்.கே.சண்முகம் செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 27 ஆண்டுகள் துணைவேந்தராக இருந்த ஏ.எல்.இலட்சுமணசாமி முதலியார், வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உதவியுடன் பெ. தூரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கலைக்களஞ்சியத் திட்டம் அக்டோபர் 20, 1947 இல் தொடங்கப்பட்டிருக்கிறது .

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கான அறிஞர் குழு அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் மு.வ., ரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ., டி.கே.சி. ஆகியோர் உறுப்பினர்களாகவும் கல்கியும் கே.சுவாமிநாதனும் செயலாளர்களாகவும் இருந்துள்ளனர்.

கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் மருத்துவக் களஞ்சியம் 13 தொகுதிகளும் சித்த மருத்துவக் களஞ்சியம் 7 தொகுதிகளும் ஆங்கில மொழியாக்கம் 5 தொகுதிகளும் அறிவியல் தொழில்நுட்பக் களஞ்சியம் 5 தொகுதிகளும் மற்றும் குறுந்தகடுகளும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

### நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாடு

# மறுவாழ்வுப் பணிகளுக்கு ஒன்றிய அரசு ஒரு பைசா கூட வழங்கவில்லை!

## கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் சாடல்!

*திருவனந்தபுரம், நவ.3-*

*நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாட்டில் மறுவாழ்வு பணிகளுக்காக ஒன்றிய அரசு ஒரு பைசா கூட வழங்கவில்லை என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் குற்றம் சாட்டியுள்ளார்.*

*கேரள மாநிலம் உதயமான 68வது ஆண்டையொட்டி, உரையாற்றிய முதலமைச்சர் பினராயி விஜயன், ஒன்றிய பா.ஜ.க. அரசை கடுமையாக விமர்சித்தார்.*

*வயநாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டு 90 நாட்கள் கடந்த நிலையில், மறுவாழ்வு பணிகளுக்காக பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஒரு பைசா கூட நிதியுதவி வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.*

*பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இயற்கை பேரிடர் ஏற்பட்டால் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யும் ஒன்றிய அரசு, கேரளாவை மட்டும் கொடூரமாக புறக்கணிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.*

*அரசியல் உள்நோக்கத்துடன் கேரளாவை ஒன்றிய அரசு திட்டமிட்டு வஞ்சிப்பதாகவும் முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.*

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' நாட்டின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல்!

## இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா எச்சரிக்கை!

*டெல்லி, நவ.3-*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் சர்வாதிகார ஆட்சிக்கே வழி வகுக்கும் -என டி.ராஜா தெரிவித்துள்ளார்.*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் நடைமுறையால் நாட்டின் ஒற்றுமைக்கே அச்சுறுத்தல் ஏற்படும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா எச்சரித்துள்ளார்.*

*இதுதொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு எதிராக நாட்டு மக்கள் மத்தியில் வலுவான நிலைபாடு இருக்கிறது என்றார். பிரதமர் மோடியின் தற்போதைய குறிக்கோளான ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது, நாட்டின் ஜனநாயக நடைமுறையை அழித்துவிடும் என்றும் தெரிவித்தார்.*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது நாடாளுமன்ற ஜனநாயகத்தை அழித்து விடும் பல கட்சிகள் என்ற ஜனநாயக நடைமுறையை*



*நிலைகுலையச் செய்யும் கூட்டாட்சி நிர்வாகத்தையும், தற்போதைய அதிகார அமைப்புகளையும் சீரழித்து விடும் இந்திய நாடு என்பது பல மாநிலங்கள் சேர்ந்த ஒன்றியம் ஆகும்*

*இதில், மாநிலங்களுக்கென ஓர் அதிகாரம் உள்ளதுஅதேபோல ஒன்றிய அரசுக்கும் அதிகாரம் இருக்கிறது ஒரே நாடு, ஒரே தேர்தல் சர்வாதிகார ஆட்சிக்கே வழி வகுக்கும் அரசியலமைப்பின் அடிப்படை கொள்கைகளையே அழித்து விடும்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

### சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில்

# தீபாவளி முன்னெச்சரிக்கை தீக்காய சிறப்புப் பிரிவில் ஆய்வு!

## சிகிச்சை பெறுபவர்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து ஆறுதல்!

*சென்னை, நவ.3-*

*மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 31.10.2024 அன்று சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீபாவளி அரசு விடுமுறை நாளில் பணியில் உள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நேரில் சந்தித்து இனிப்புகள் வழங்கி, தேநீர் அருந்தி அவர்களுடன் கலந்துரையாடினார்.*

*பின்னர் தீபாவளி முன்னெச்சரிக்கை தீக்காய சிறப்பு பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.*

*பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-*

*கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீபாவளி தீக்காய சிறப்பு பிரிவு ஒன்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் 25 படுக்கைகளுடன் கொண்ட ஒரு பிரிவு தொடங்கி வைக்கப்பட்டது.*

*முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, தமிழ்நாட்டில் இருக்கிற சேவை துறைகள் அனைத்தும் தீபாவளி பண்டிகையையொட்டி அரசு எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், ஏற்படுத்தப்பட வேண்டிய விழிப்புணர்வு குறித்தும் தொடர்ந்து பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது.*

*அந்த வகையில் தீயணைப்பு துறையின் சார்பில் பட்டாசுகள் எப்படி வெடிக்க வேண்டும் என்பது குறித்தான பல்வேறு விளக்க நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் இந்த மருத்துவமனை வளாகத்திலும் கூட அந்த நிகழ்ச்சி தீயணைப்பு துறையினரால் நடத்திக் காட்டப்பட்டது.*

*அதேபோல் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் எந்தெந்த வகைகளில் பட்டாசு வெடிக்கப்பட வேண்டும் என்பது குறித்து தொடர்ந்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். காவல்துறையினரை பொறுத்தவரை பாதுகாப்பான தீபாவளி கொண்டாட்டங்கள் குறித்து அவர்களும் பல்வேறு அறிவிப்புகளையும், விழிப்புணர்வையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள்.*

**சிறப்புப் பிரிவு!**

*அந்த வகையில் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் இந்த மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என்று பிரத்யேகமாக 25 படுக்கைகள் கொண்ட தீபாவளி விபத்துக்கள் சம்பந்தமான ஒரு சிறப்பு பிரிவு ஒன்று இங்கே தொடங்கி வைக்கப்பட்டது.*

*கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரை தீபாவளி கொண்டாட்டங்களின் போது பட்டாசு வெடிப்புகளினால் உயிரிழப்புகள் இல்லாத நிலை என்பது தொடர்ச்சியாக இருந்து வருகிறது.*

**தோல் வங்கி!**

*அரசின் சார்பில் தொடர்ந்து மேற்கொண்டு வருகிற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் விழிப்புணர்வு நடவடிக்கைகளும், இன்றைக்கு பெரிய அளவில் பலன் தந்து கொண்டிருக்கிறது, அந்தவகையில் கீழ்ப்பாக்கம், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பொறுத்தவரை ஏராளமான அதிநவீன வசதிகளும் தொடர்ந்து செய்து தரப்பட்டு வருகிறது. புதிதாக இம்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தோல் வங்கி ஒன்றும் தொடங்கப்பட்டுள்ளது.*

*கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாள் இங்கே உயரழுத்த பிராண வாயு சிகிச்சை மையம் ஒன்று தொடங்கி வைக்கப்பட்டது. அதிநவீன சிகிச்சை முறைகளில் ஒன்றான உயர் அழுத்த பிராண வாயு சிகிச்சை மையம் இன்றுடன் சேர்த்து 44 நோயாளிகள் சிகிச்சை பெற்று பலன் அடைந்திருக்கிறார்கள்.*

*இன்று தீபாவளியினையொட்டி, இதுவரை பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் அனைத்து மாவட்டங்களிலும் மேற்கண்ட விபத்துகளை எல்லாம் இன்றைக்கு கேட்டறிந்திருக்கிறோம். அந்த வகையில் சென்னையை பொறுத்தவரை 6 பேர் சிறிய பாதிப்புகள் என்று வந்து கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பி இருக்கிறார்கள். 3 பேர் இம்மருத்துவமனையில் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதில் 2 குழந்தைகள், ஒரு குழந்தைக்கு 11 சதவிகிதம் என்று, இன்னொரு குழந்தைக்கு 12 சதவிகிதம் என்று பாதிப்புக்குள்ளாகிய சிகிச்சை பெற்று வருகிறார்கள். இரண்டு நாள் சிகிச்சைகளுக்கு பிறகு அவர்களும் நலமுடன் இல்லம் திரும்புவார்கள், ஒருவருக்கு 2 சதவிகிதத்தின் அடிப்படையில் பாதிப்பு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார், அவர் இன்றோ, நாளையோ இல்லம் திரும்புவார்.*

**உயிர் பாதிப்பு இல்லை!**

*மதுரை மாவட்டத்தில் 5 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதில் ஒருவருக்கு மட்டும் 20 சதவிகிதம் அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது, அவருக்கும் உயிர் பாதுகாப்பு என்கின்ற நிலை நீடித்து வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 6 பேரும், திருச்சியை பொறுத்த வரை 3 பேர் என்று இது வரை அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருபவர்கள் 20 பேர், இந்த 20 பேரில் 20 சதவிகிதம் தான் அதிகபட்சமான பாதிப்பு என்கின்ற நிலையிலும், மீதமிருப்ப வர்களுக்கு குறைந்த அளவிலான பாதிப்புகள் என்கின்ற அளவில் இருக்கின்றது. எனவே இந்த ஆண்டும் தீபாவளியையொட்டி உயிர் பாதிப்புகள் இல்லாத வகையில் நடைபெற்று முடிந்திருப்பது என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.*

**துணை முதலமைச்சர் ஆய்வு**

*துணை முதலமைச்சர் அவர்கள் நேற்று இரவு 9 மணிக்கு கூட 108 ஆம்புலன்ஸ் சேவையை அதனுடைய செயல்பாட்டை நேரடியாக ஆய்வு செய்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 1,353 ஆம்புலன்ஸ் வாகனங்கள் பயன்பாட்டில் இருக்கிறது. 108 ஆம்புலன்ஸ் நிர்வாகத்தை பொறுத்தவரை, ஒரு ஓட்டுநர் கூட விடுப்பு எடுக்கக் கூடாது என்கின்ற நிலையிலும், அந்த ஆம்புலன்ஸில் பணியாற்றிக் கொண்டிருக்கிற மருத்துவத்துறையை சேர்ந்த அலுவலர்கள் யாரும் விடுப்பு போடக்கூடாது என்றும் அறிவுறுத்தி, அனைத்து வாகனங்களும், அந்தந்த வாகனங்கள் நிறுத்துமிடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டு, மக்களுக்கு சேவையாற்றி வருகிறது. 108 மையத்தை பொருத்தவரை, நாள்தோறும் சுமார் 1,2000 அழைப்புகள் வரை வந்து கொண்டிருக்கிறது.*

*தீபாவளியை பொருத்தவரை அந்த ஒரு நாளில் மட்டும் அந்த 12,000 என்பது 70% உயர்ந்து 20,000 வரை வரும். அந்த வகையில் தினந்தோறும் 108 ஆம்புலன்ஸ்கள் மூலம் பயன்பெறுபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை 5,000 எண்ணிக்கையில் இருக்கும். தீபாவளியைப் பொறுத்தவரை 8,000 வரை உயரும். அதனை நேற்று துணை முதலமைச்சர் அவர்கள் 108 ஆம்புலன்ஸ்களின் பணிகளை ஆய்வு செய்து கண்காணித்தார்கள்.*

*அந்த வகையில் அனைத்து துறைகளின் சார்பிலும் குறிப்பாக தமிழ்நாட்டின் சேவை துறைகள் அனைத்தும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மிகத் தீவிரமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி கூடுதல் இயக்குநர் மரு.சாந்தாராமன், அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.லியோ டேவிட், தீக்காய சிகிச்சை பிரிவு துறைத்தலைவர் மரு. நெல்லையப்பர், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.பாஸ்கரன், நிலைய மருத்துவ அலுவலர் மரு. வாணி மற்றும் மருத்துவத் துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.*

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - இரண்டு நாள் கோவையில் சுற்றுப்பயணம் !

## அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

*கோவை, நவ.3-*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 மற்றும் 6 தேதிகளில் கோவையில் சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளார். இந்நிலையில், முதல்வர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இடங்கில், தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, காந்திபுரம் மத்திய சிறை வளாகத்தில் அமைக்க உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.*

*இதைத்தொடர்ந்து,*



*அவர் பேட்டியின்போது கூறுகையில்;*

*விளாங்குறிச்சியில் எட்டு தளங்களுடன் 300கோடி மதிப்பீட்டில் 2,98,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப பூங்காவை ஐந்தாம் தேதி முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.*

*ஆறாம் தேதி காந்திபுரம் பேருந்து நிலையம் முன்பிருக்கும் மத்திய சிறைச்சாலை மைதானத்தில், கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் அறிவியல் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டுகிறார். ஏழு தளங்களுடன் ஒரு லட்சத்து 98 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் இந்த நூலகம் அமைகிறது.*

*கோவையில் நடைபெற்ற மூணு மாவட்ட செயற்குழு கூட்டத்தில், நாங்கள் பேசாத கருத்துக்களை எல்லாம் ஒரு நாளிதழ் வெளியிட்டுள்ளது. தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.*

*இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன், கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் Ex Mla, தொ.அ.ரவி, தளபதி முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் மேயர் ரங்கநாயகி, துணைமேயர் வெற்றிச்செல்வன், ஏ.பி.நாகராஜ் exMP மாவட்ட துனைச் செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பொதுக் குழு உறுப்பினர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டத்தில் 2024–25ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பனமரத்துப்பட்டி, அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அ.அபிநயா உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.